2. தகவல் கோரல்.

அ. சென்னை மாநகராட்சி பணிகள் குறித்து.

* திரு. எல் இளையபெருமாள் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார். பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே சேத்துப்பட்டிலே 1980 ஆம் ஆண்டு, 1982 ஆம் ஆண்டு தீ விபத்துக்கள் ஏற்பட்டன. முதலமைச்சர் அவர்களும் வந்தார்கள். ரெவின்யூ அமைச்சர் அவர்களும் வந்து பார்த்தார்கள். உள் ளாட்சித் துறை அமைச்சரும் பார்வையிட்டார்கள். இன்று வரையிலே விளக்குகள் எரியவில்லை. கல்யாண்மேஸ்திரி என்ற இடத்திலே விளையாட்டுத் திடலாக இருந்த அந்த இடத்தைப் பயன்படுத்த ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டும்கூட விளை யாடுகின்ற பிள்ளைகளுக்கு—விளையாட்டுக்காக இவ்வளவு செய் கின்ற நிலையில் இந்த அரசு இருக்கிறபோது—அந்த இடத்தைக் கொடுக்காமல் அந்த இடத்தை குப்பைகளை கொட்டும் இடம் ஆகப் பயன்படுத்துகிறார்கள். இதைப்பற்றி நான் அதிகாரிகளி டத்தில், அமைச்சர்களிடத்தில் சொன்னேன். உடனடியாக அதைச் செய்யப் போகிறார்களா ? அதைச் செய்ய முடியாமல் இருப்பதற்கு என்ன காரணம் என்பதை தங்கள்மூலமாகக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள் சொன்ன இந்த பிரச்சினைப்பற்றி நானும் அவர்களும் அந்த இடங்களையெல்லாம் போய்ப் பார்த்தோம். ஆகவே பல்வேறு பணிகளை அந்த இடத்தில் மாநகராட்சி மூலமாக செய்ய வேண்டுமென்று ஆணையாளருக்கு உத்திரவிடப்பட்டிருக்கிறது. விளக்குகள் எரியவில்லை, குப்பைகூளங்களை அகற்றவில்லை என் பதைச் சொல்லி அந்த விளையாட்டுத் திடல் அந்தப் பகுதிக்குத் தேவை என்பதைச் சொல்லி அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் படுகின்றன. எவ்வளவு சீக்கிரத்திலே அதைச் செய்ய முடியுமோ அதை நாம் செய்ய நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். வி. என். சோமு : சார், ஒரே ஒரு பிரச்சினை முக்கியமானது.

திரு. ப. பொன்னுரங்கம் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோருக்கும் தொகுதி குறித்த பிரச்சினைகள் இருக்கலாம். சென்னையிலே இருக்கிற வர்களுக்கு மட்டுமல்ல, இந்த அவையிலே இருக்கிற 234 உறுப் பினர்களுக்கும் தொகுதிப் பிரச்சினைகள் இருக்கலாம். அவை களையெல்லாம் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுப்பி கிளப்பக் கூடிய மரபை உருவாக்காதீர்கள். அப்படிப்பட்ட மரபு எந்த அவையிலும் இல்லை. பாராளுமன்றத்திலேயும் இல்லை. ஆகவே புது மரபை உருவாக்க வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(ஆ) பி அண்ட் சி மில் பகுதியை வெள்ளப் பகுதியென அறிவிப்பது.

திரு. என். வி. என். சோமு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது முக்கியமான பிரச்சினை. பொதுப் பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சொல்வதை நான் பார்ப்பேன். நோட்டீஸ் கொடுக்காமல் குறுக்கு வழியில் நுழைந் தால் அதை நான் அனுமதிக்க மாட்டேன், நீங்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டு விடும்.

திரு. என். வி. என். சோமு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் அடித்த வெள்ளத்தினால்—ஏற்கனவே பி. அண்ட் சி. மில் தொழிலாளர்கள் வேலையின்றி இருக்கிறார்கள்—கூட்டுறவு சங்கம் அவர்களுக்கு கடன் கொடுப் பதற்குத் தயாராக இருக்கிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் அதை வெள்ளப் பகுதி என்று அறிவித்து விட்டால் கூட்டுறவுச் சங்கம் அவர்களுக்கு கடன் கொடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெள்ள நிவாரணம் பற்றி இன்று மாலை 4 மணி முதல் விவாதம் நடக்க இருக்கிறது. (குறுக்கீடு) அப்போது தாங்கள் அதை எல்லாம் எடுத்துச் சொல்லி தேவையான பதிலைப் பெற்றுக்கொள்ளலாம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS